தினகரன்

12 August 2025

### மீனவ பெண்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால்

# கடல்பாசி வளர்ப்பு திட்டத்தில் பொருளாதார வளர்ச்சி அடையலாம்

## ஆளுநர் கைலாசநாதர் அறிவுரை



**காரைக்கால், ஆக. 12:** பாரதப் பிரதமர் நரேந்திர மோடி கனவு திட்டமான மீனவ மக்களின் பல்வேறு திட்டங்களில் ஒன்றான கடல் பாசி வளர்ப்பு திட்டமானது இந்தியாவில் கடற்பாசி வளர்ப்பிற்காக திட்டம் தொடங்கப்பட்டு பல்வேறு மாநிலங்களில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

இதில் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் இந்த கடற்பாசி உற்பத்தியை விரிவடைய செய்து கரையோர மக்களுக்கு பல வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. இவ்வாறு அறுவடை செய்யப்படும் கடற்பாசிகள் உணவுப் பொருளாகவும், அழகு சாதன பொருட்கள், தொழில்துறை மற்றும் மருத்துவ பயன்பாட்டிற்கு என பல விதங்களில் பயன்படுத்தப்படுகிறது.

மீனவப் பெண்களுக்கான இந்த வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் காரைக்கால் மாவட்டத்தில் பட்டினச்சேரி மற்றும் கருக்காளாச்சேரி ஆகிய மீனவ கிராமங்களின் அருகில் கடல் பகுதியில் ஓரங்களில் ஒரு ஆண்டு காலத்திற்கு கூண்டு மீன் வளர்ப்பு மற்றும் கடல்பாசி சாகுபடி படல்களை கடலில் நிறுவி அவற்றை பராமரித்து வர மீனவ மகளிர்க்கு பயிற்சி அளித்து வருகிறது. மேலும் கரைகள் மாவட்டத்தில் உள்ள மற்றைய கடற்கரை கிராமங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது.

இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த முதற் கட்ட ஆய்விற்காக மத்திய கடல்வள ஆராய்ச்சி நிறுவனத்திற்கு புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் தலா இரு மீனவ கிராமங்களுக்கு ரூ.50 லட்சம் மதிப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த ஏப்ரல்-2025 -ல் கையொப்பமிடப்பட்டது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் கடல் பாசி வளர்ப்பு மற்றும் கூண்டு முறை மீன் வளர்ப்பு திட்டம் என்பது இதுவே முதல் முறை ஆகும்.

இதன் தொடர்ச்சியாக காரைக்கால் மாவட்டத்தில் பட்டினச்சேரி மற்றும் கருக்களாச்சேரி ஆகிய இரு மீனவ கிராமங்களில் கடந்த 8 ம் தேதி புதுச்சேரி துணைநிலை ஆளுநரின் செயலரும் மீன்வளத்துறையின் செயலருமாகிய மணிகண்டன் தலைமையில் பட்டினச்சேரி மீனவ கிராம கடற்கரையிலிருந்து கடல் பாசி வளர்ப்பிற்கான படல்களை கடலில் நிறுவ செய்யும் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார்.

மேலும் கடல் பாசி வளர்ப்பில் ஈடுபடும் மீனவ மகளிருடன் அது குறித்து கலந்துரையாடி மீன்பிடி படகின் மூலம் கடலுக்கு சென்று கடல் பாசி வளர்ப்பு படல்களை கடலில் நிறுவ செய்யும் நிகழ்வினையும் பார்வையிட்டார்.

இத்திட்டத்தை செயல்படுத்தும் மத்திய கடல்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்ட விஞ்ஞானிகளிடம் கடல்பாசி வளர்ப்பு குறித்தும் மீன்வளத்துறை செயலர் மணிகண்டன் கேட்டறிந்தார். இதனிடையே பட்டினச்சேரி மீனவ கிராமத்தில் கடலில் கூண்டு மீன் வளர்ப்பு மற்றும் படல்கள் மூலம் கடல்பாசி சாகுபடி செய்யும் மீனவ பெண்களுடன் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் கைலாசநாதன் கலந்துரையாடினார்.